# மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின்

# 2018-2019-ம் நிதி ஆண்டு வருடாந்திர திட்ட அறிக்கை

## (Annual Plan)

அரசாணை (எம்.எஸ்) எண்.57, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள்.19.05.2017, அரசாணை (எம்.எஸ்) எண்.90, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள்.27.07.2017 மற்றும் அரசாணை (எம்.எஸ்) எண்.81, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள்.14.08.2018-ன்படி உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ன்படி மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க. எண்.764/2017-கனிமம், நாள்.12.09.2017-ன்படி மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையானது கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டு, இவ்வறக்கட்டளையானது ஆவண எண்.119/2017/BK4, நாள்.21.09.2017-ன்படி தல்லாகுளம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிர்வாகக் குழு அமைப்பு | வ. எண் | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், மதுரை | 1. | மாவட்ட ஆட்சியர், மதுரை |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், மதுரை | 2. | மாவட்ட வருவாய் அலுவலர், மதுரை |
| 3. | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, மதுரை. | 3. | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, மதுரை. |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை | 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை |
| 5. | துணை இயக்குநர், (சுகாதாரம்), மதுரை | 5. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், (வளர்ச்சி), மதுரை |
| 6. | முதன்மைக் கல்வி அலுவலர், மதுரை | 6. | உதவி இயக்குநர் (பஞ்சாயத்து), மதுரை |
| 7. | மாவட்ட கருவூல அலுவலர், மதுரை | 7. | மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர், மதுரை |
| 8. | மாவட்ட சமூக நல அலுவலர், மதுரை | 8. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், மதுரை |
| 9. | உதவி இயக்குநர் (பஞ்சாயத்து), மதுரை | 9. | மாவட்ட வன அலுவலர், மதுரை |
| 10. | திரு. எ. ரவீந்திரன்,<br>எண். 30, சங்கர்நகர் 3வது தெரு,<br>கோ.புதூர், மதுரை<br>(அரசு சாரா அலுவலர்) | 10. | முதன்மைப் பொறியாளர், பொ.ப.து, நீ.ஆ.அ, மதுரை |
| 11. | திரு. எஸ்.எல். சொக்கலிங்கம்,<br>கூடுதல் இயக்குநர், (ஓய்வு),<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை,<br>சென்னை | 11. | உதவி இயக்குநர், நில அளவை, மதுரை |

| | | | |
|---|---|---|---|
| | | 12. | மாவட்ட கருவூல அலுவலர், மதுரை |
| | | 13. | மாவட்ட சமூக நல அலுவலர், மதுரை |
| | | 14. | துணை இயக்குநர், (சுகாதாரம்), மதுரை |
| | | 15. | இணை இயக்குநர், (வேளாண்மை), மதுரை |
| | | 16. | தொழிலாளர் ஆய்வாளர், மதுரை |

மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளைக்காக, பாரத ஸ்டேட் வங்கி, வணிகவரி அலுவலக கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண்.37193268816) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ல், குவாரிகளால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகளான பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுற்றுச்சூழல், சுகாதார வசதிகள், கல்வி வளர்ச்சித் திட்ட பணிகள், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான நல்வாழ்வு திட்டம் மற்றும் இதர பணிகள் ஏற்படுத்திதருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் திட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தில் 16 பெருங்கனிம சுரங்கக் குத்தகை உரிமங்களும், 101 சிறு கனிம குவாரி (103 கிரானைட் குவாரிகள் நீங்கலாக) குத்தகை உரிமங்களும் நடப்பிலுள்ளன. நடப்பிலுள்ள 16 பெருங்கனிம உரிமங்களும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் இசைவு பெற்று சமர்ப்பிக்காத காரணத்தினாலும், வேறு சில காரணங்களுக்காகவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் நடப்பிலுள்ள 101 சிறுகனிம குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையும் கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தில் குவாரி பணிகளால் நேரடியாக 111 கிராமங்களும், அதனைச்சுற்றி 1கி.மீ தொலைவில் உள்ள கிராமங்கள் மறைமுகமாக பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன. மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதி கணக்கில் 31.03.2019 வரை ரூ.1,92,59,612/- (ஒரு கோடியே தொன்னூற்று இரண்டு இலட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து அறுநூற்று பண்ணிரண்டு மட்டும்) வசூலிக்கப்பட்டு, இழப்பீடு வழங்கப்பட்ட தொகை **ரூ.5,00,000/-** **(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)**, வங்கி

சேவைக் கட்டணம் பிடித்தம் செய்த தொகையான **ரூ.21,378/-** (ரூபாய் பதினெட்டாயிரத்து ஐநூற்று நாற்பத்து ஆறு மட்டும்) மற்றும் திட்டங்களுக்கு செலவீடு செய்யப்பட்ட தொகை **ரூ.35,04,100/- (ரூபாய் முப்பத்து ஐந்து இலட்சத்து நான்காயிரத்து நூறு மட்டும்)** போக **ரூ.1,52,34,144/- (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து இரண்டு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து நூற்று நாற்பத்து நான்கு மட்டும்)** இருப்பில் உள்ளது

2018-2019-ம் நிதியாண்டில் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணையின்படி 23 பணிகளுக்கு தொகை **ரூ.49,74,100/- (ரூபாய் நாற்பத்து ஒன்பது இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து நூறு மட்டும்)** ஒதுக்கீடு செய்யப்பட்டு 12 பணிகள் நிறைவு செய்யப்பட்டது மற்றும் 1 திட்டம் இரத்து செய்யப்பட்டது. மீதமுள்ள 10 திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இவ்வறிக்கையானது மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் மேலாண்மை மற்றும் நிர்வாக குழு முன்பு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் செய்யப்பட்டது.

தலைவர், மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு
அறக்கட்டளை / மாவட்ட ஆட்சித்தலைவர்,
மதுரை.